இலங்கை அகதிகள் முகாம்கள்.

599—(*வினா எண். 1454) திரு. கு. ரமணி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் இலங்கை அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை முகாம்கள்?

(இ) அவைகளில் உள்ள அகதிகள் எவ்வளவு பேர்கள்?

(ஈ) அதன் விவரம் என்ன?

(உ) அவர்களுக்கு தினம் ஒன்றுக்கு நபருக்கு என்ன செலவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : (அ) ஆம்.

(ஆ) 17 முகாம்கள்.

(இ) 17 முகாம்களிலும் 31–3–1986 நிலைப்படி மொத்தம் 507 குடும்பங்களைச் சேர்ந்த 2,027 நபர்கள் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

(ஈ) அடியில் குறிப்பிட்டுள்ள விவரப்படி பெரியார் மாவட்டத்தில் அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :

ஈரோடு வட்டத்தில்	..	3 முகாம்கள்
பெருந்துறை வட்டத்தில்	..	3 முகாம்கள்
தாராபுரம் வட்டத்தில்	..	2 முகாம்கள்
காங்கயம் வட்டத்தில்	..	3 முகாம்கள்
பவானி வட்டத்தில்	..	2 முகாம்கள்
கோபி வட்டத்தில்	..	2 முகாம்கள்
சத்தி வட்டத்தில்	..	2 முகாம்கள்

(உ) சராசரி ஒரு நபருக்கு ரூ. 4.20 பைசா செலவு செய்யப் படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1986 ஏப்ரல் 28]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அகதிகள் வசிக்கின்ற மையங்களில் போதுமான கழிப்பிட வசதி இல்லை என்பதும், அவர்கள் பத்திரமான நிலையில் இருக்க முடிய வில்லை என்பதும், சுற்றிலும் பாதுகாப்பு இல்லாத நிலையில் அவர்கள் வைத்திருக்கக்கூடிய பொருள்களைக் கூட களவாடிச் செல்லக்கூடிய அபாயங்கள் ஏற்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே அந்த மையங்களை பாதுகாப் பாகவும் பத்திரத் தன்மையோடும், சுகாதாரத்தோடும் வைத் திருக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? வைத்திய வசதிகள் அந்த முகாம்களில் ஏற்படுத்துவதற்கு ஏதாவது டாக்டர்கள் அங்கே நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் அந்த மையங்களில் போய் வைத்திய வசதி செய்வதற்கு உரிய நட வடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய 171 மையங்களில் அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கக்கூடிய அளவில்தான் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறது. பொதுவாக இருக்கக்கூடிய மையங்களில், ஆங்காங்கு இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர்கள் அந்த மையங்களுக்குச் சென்று பரிசோதித்து வருகிற சூழ் நிலை இருந்து கொண்டிருக்கிறது. மேலும் பாதுகாப்பு இல் லாத நிலை அவர்களுக்கு இருப்பதாகக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அகதிகள் மிகுந்த கவனத்தோடு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, குடியமர்த்திய நேரத்திலே இருந்து இதுவரையில் தினசரி அவர்களுக்கு கொடுக்கக்கூடிய தொகையைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து பொருள்களின் விலை எக்கச்சக்கமாக ஏறியிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் அந்தத் தொகையை ஏதாவது உயர்த்திக் கொடுக்க உண்மையிலேயே அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா? இல்லை என்றால் குறைந்த பட்சம் அவர்களுடைய சாப்பாடு மற்ற வசதிகளுக்குத்தேவை யான அளவுக்கு அதைக் கணக்கிட்டாவது அதை உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 பெரியவர்கள் 12 வயதுக்கு உள்ளே உள்ள 2 சிறுவர்கள் சேர்ந்து, 5 பேர்கள் உள்ள ஒரு குடும்

பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 357.50 பைசா வீதம் கொடுக்கப் படுகிறது. மானிய விலையில் அவர்களுக்கு அரிசி 57 பைசா ஒரு கிலோ என்று வழங்கப்படுகிறது. ஆகையினால் போது மான அளவிலேதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு முகாம்களுக்கு சென்று பார்க்கிற போது, அரசாங்கம் தருகிற அந்தப் பணத்தை அவர்கள் முறையாக செலவு செய்வார்களேயானால் நிச்சயமாக போது மான அளவுக்கு இருக்கிறது என்றுதான் அங்கே இருக்கக்கூடிய அகதிகளில் சிலரே சொல்லியதை நான் கேள்விப்பட்டிருக் கிறேன்.

திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் சக்தி வட்டத்தில் அமைந்துள்ள 2 அகதிகள் முகாம்களில் இருக்கிற—கெம்ப நாயக்கன் பாளையம், பெரும் பள்ளம் அணைக்கட்டு பகுதி யிலே அமைந்துள்ள முகாம்களில் இருக்கின்ற அகதிகள் இரண்டு பிரிவாகப் பிரிந்து தங்களுக்குள்ளேயே தகராறு செய்து கொண்டும் அந்தப் பகுதியிலே இருக்கிற மற்ற மக்களுக்கு இடையூறு செய்து கொண்டும் இருப்பது பற்றி அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அந்த அகதி மையங்களில் வழங்கப்படுகின்ற அரிசி மிக மக்கிப் போனதாகவும், புழுத்த அரிசியாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை மாற்றி நல்ல அரிசி யாக கொடுக்க அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. து. இராமசாமி : தலைவர் அவர்களே, இலங்கையிலே வன்முறையினாலே பாதிக்கப்பட்டுள்ள நம் முடைய சகோதரர்கள், வன்முறையாளர்களால் இங்கே விரட்டியடிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் முறை யாகக் கவனிக்கப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அளவிலேதான் பல்வேறு மாவட்டங்களில் குடி அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும், அமைதியாக இருக்க வேண்டும், இங்கே உங்கள் நிலைமையை நீங்கள் இவ்வாறு குறைத்துக் கொள்ளக் கூடாது என்றும் ஆங்காங்கு அருகிலே உள்ள சகோதர மக்களும், நாமும் தான் அவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்கவேண்டும், அத்தோடு மக்கிப் போன அரிசி கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படி அரிசி கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அப்படி உண்மையிலேயே எங்காவது இருந்தால், அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், நிச்சயமாக நல்ல அரிசி வழங்க அரசு ஏற்பாடு செய்யும்,